இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 27-03-2024

# தோல்வி பயத்தில் தப்பாட்டம்!

**400** இடங்களைக் கைப்பற்றுவோம், 370 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று பம்மாத்து காட்டும் பா.ஜ.க.வுக்கு உண்மையில் 160க்கும் குறைவான இடங்கள் தான் கிடைக்கும் என்று மத்திய உளவுத்துறை அறிக்கை கொடுத்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. அதை விட முக்கியமாக பா.ஜ.க.வின் கோட்டை என்று சொல்லப்படும் மாநிலங்களில் அறிவிக்கப்பட்ட பா.ஜ.க. வேட்பாளர்கள் பின்னங்கால் பிடறியில் அடிபட தப்பித்து ஓடிக் கொண்டு இருக்கிறார்கள். குஜராத், உ.பி. போன்ற மாநிலங்களிலேயே பா.ஜ.க. வேட்பாளர்கள் போட்டியில் இருந்து விலகிக் கொண்டு இருக்கிறார்கள். வடகிழக்கு மாநிலங்கள் சிலவற்றில் போட்டியில் இருந்து பா.ஜ.க.வே விலகிவிட்டது.

'தென் மாநிலங்களில் வெற்றி பெற முடியாது - வட மாநிலங்களில் வெற்றி பெற்றுவிடுவோம்' என்று சொல்லி வந்தார்கள் சில வாரங்களுக்கு முன்பு வரை. இப்போது, வட மாநிலங்களின் நிலவரமும் கலவரமாக இருக்கிறது பா.ஜ.க.வுக்கு.

**இதனால் ஏற்பட்ட ஆத்திரமும் கோபமும் கண்ணை மறைக்கிறது பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கு. தோல்வி பயத்தில் எதைச் செய்வது, எதைச் செய்யக் கூடாது என்பதே தெரியாமல் மூர்க்கத்தனமான சர்வாதிகார நடவடிக்கைகளைச் செய்து வருகிறார்கள்.** டெல்லி முதலமைச்சர் அரவிந்த கெஜ்ரிவால் அவர்களைக் கைது செய்திருப்பது அத்தகைய நடவடிக்கைதான்.

அரசியல் பழிவாங்கும் எண்ணத்துடன் டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா கைது செய்யப்பட்டு 13 மாதங்களாகச் சிறையில் இருக்கிறார். ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டுள்ளார். தெலுங்கானா மாநில முன்னாள் முதலமைச்சர் சந்திரசேகர ராவ் அவர்களின் மகள் கவிதா சில நாட்களுக்கு முன்னாள் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் தொடர்ச்சியாக டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலையும் கைது செய்துள்ளார்கள். இது அப்பட்டமான பழிவாங்கும் நடவடிக்கையே.

இந்தியா முழுமைக்கும் நாடாளுமன்றத் தேர்தல் களம் சூடாகி வருகிறது. பிரதமர் நரேந்திரமோடி மீதான மக்களின் கோபம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. தேர்தல் பத்திரங்கள் என்ற பெயரால் மாபெரும் முறைகேடுகளில் இறங்கி உச்சநீதிமன்றத்தால் குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளது பா.ஜ.க. **'தேர்தல் பத்திரங்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படையுங்கள்' என்று பாரத ஸ்டேட் வங்கிக்கு கடுமையான உத்தரவைப் போட்ட பிறகும் அவர்களைச் செயல்பட விடாமல் தடுத்து வந்தது பா.ஜ.க. அரசு. இறுதி வரை உச்சநீதிமன்றம் தனது பிடியை இறுக்கமாக வைத்திருந்த நிலையில் அனைத்து விபரங்களையும் பாரத் ஸ்டேட் வங்கி வழங்கிவிட்டது. இந்த விபரங்கள் முழுமையாக வெளியானால் பா.ஜ.க.வின் முகத்திரை கிழியும் என்பதால் அதைத் திசை திருப்புவதற்காக டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்துள்ளார்கள்.**

பா.ஜ.க.வின் யோக்கியதையை ஆம் ஆத்மி கட்சி அம்பலப்படுத்தி இருக்கிறது.

**"மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்ற பா.ஜ.க. தலைவர் நட்டாவை அமலாக்கத்துறை கைது செய்ய வேண்டும்"** என்று கோரிக்கை வைத்துள்ளது ஆம் ஆத்மி கட்சி.

**"மதுபான முறைகேடு புகாரில் கைது செய்யப்பட்ட அரவிந்தோ ஃபார்மா இயக்குனரிடம் பா.ஜ.க. ரூ.55 கோடி தேர்தல் நன்கொடை பத்திரத்தைப் பெற்றுள்ளது. ரூ.55 கோடிக்கு பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரம் வழங்கிய பின்னர் அரவிந்தோ ஃபார்மா இயக்குனர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்றது குறித்து பிரதமர் மோடியும், பா.ஜ.க. தலைவர் நட்டாவும் விளக்கம் அளிக்க வேண்டும். இது குறித்து அமலாக்கத்துறையும் விளக்கம் அளிக்க வேண்டும்"** - என்று ஆம் ஆத்மி கட்சி கோரிக்கை வைத்துள்ளது. இதைப் பற்றி இது வரை பிரதமரோ, உள்துறை அமைச்சரோ வாய் திறக்கவில்லை.

தனக்கு எதிராக 'இந்தியா' என்ற வலிமையான கூட்டணியை எதிர்க் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து அமைத்தது முதல் நிலை கொள்ளாமல் தவறுகளுக்கு மேல் தவறுகளைச் செய்து வருகிறது பா.ஜ.க. தலைமை. இது போன்ற கைதுகள், அரட்டல், மிரட்டல்கள் அனைத்தும் 'இந்தியா' கூட்டணியை வலிமையாக ஆக்கியதே தவிர பலவீனப்படுத்தவில்லை. அரைக்க அரைக்க சந்தனம் மணப்பதைப் போல, தாக்குதல் அதிகமாக அதிகமாக கூட்டணியும், கூட்டணித் தலைவர்களும் வலிமை அடைகிறார்கள். இதைத்தான் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பார்க்கிறோம்.

சி.பி.ஐ., அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தவறாக பயன்படுத்தும் பா.ஜ.க.வை கண்டித்து மார்ச் 31 ஆம் தேதி 'இந்தியா' கூட்டணி சார்பாக டெல்லியில் போராட்டம் நடைபெற இருக்கிறது. சி.பி.ஐ., அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தேர்தல் ஆணையத்திடம் கட்டுப்பாட்டில் வைக்கவும் இக்கட்சிகள் வலியுறுத்தி இருக்கிறார்கள். அரவிந்த் கெஜ்ரிவால் கைது, நடுநிலையாளர்களை மட்டுமல்ல; பா.ஜ.க. ஆதரவாளர்களையும் சிந்திக்க வைத்துள்ளது. 'ஐயோ! இதனால் பா.ஜ.க.வுக்கு கெட்ட பெயர் ஏற்பட்டுள் ளதே' என்று பா.ஜ.க. ஆதரவாளர்களும் பதறத் தொடங்கி இருக்கிறார்கள்.

தேர்தலை மக்கள் மன்றத்தில் எதிர்கொள்ள முடியாமல் அமலாக்கத் துறை, சி.பி.ஐ., வருமானவரித்துறை போன்ற புலனாய்வு அமைப்புகளின் மூலமாக எதிர்கொள்வது கோழைத்தனம் ஆகும். இவை அரசியலில் இரு பக்கமும் பாயும் ஆயுதங்கள் என்பதை யாரும் மறந்து விட வேண்டாம்.

**டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்வதன் மூலமாக 'இந்தியா' கூட்டணித் தலைவர்களை மிரட்டிப் பார்க்க நினைத்தால் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் ஏமாந்து போவார்கள். நாடு முழுவதும் நடக்கும் அனைத்து அசைவுகளையும் மக்கள் உன்னிப்**பாக கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அடக்குமுறை மூலமாக யாரும் வென்றதாக வரலாறும் இல்லை. ஆணவக்காரர்களின் ஆட்டத்தை மக்கள் அனுமதித்ததும் இல்லை.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.3.2024) அவரது இல்லத்தில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சசிகாந்த் செந்தில், செல்வி எஸ். ஜோதிமணி, எம்.கே.விஷ்ணு பிரசாத் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை, முன்னாள் மாநிலத் தலைவர் கே.வி.தங்கபாலு மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரை!

*தஞ்சாவூர், மார்ச் 27-* கும்பகோணத்தில் நடைபெற்ற தஞ்சை வடக்கு மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டத்தில் இந்தியா கூட்டணி கட்சி வேட்பாளர்களை அதிக வாக்கு வித்தாயசத்தில் வெற்றி பெற வைக்க அயராது உழைப்பது, திராவிட மாடல் அரசின் சாதனை களை விளக்கி வாக்கு கேட்பது உள்ளிட்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

25.03.2024 மாலை 3.00 மணிக்கு கும்பகோணம், தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் நசீர் முகமது தலைமையில் அவசர செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செ.இராம லிங்கம் எம்.பி., மாநில வர்த்தகர் அணி தலைவர் கோவி.செழியன் எம்.எல். ஏ., மாவட்டக் கழக நிர்வாகி கள் கோவி. அய்யாராசு, க.நசீர் முகமது, சாஸ்தா நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு,கல்யாண சுந்தரம் எம்.பி. சிறப்புரையாற்றினார்.

இதில் ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

மயிலாடுதுறை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு இந்தியா கூட்டணி கட்சியின் இந்திய தேசிய காங்கிரஸ் வெற்றி வேட்பாளரை ஆதரித்து வருகிற 06.04.2024 அன்று மாலை நடைபெறும் பொதுக் கூட்டத்தில் திராவிட நாயகர் எல்லோருக்கும் எல்லாம் என்று இந்தியாவே திரும்பி பார்க்கிற வகையில் ஆட்சி செய்து வரும் கழக தலைவர் தளபதி அவர்கள் சிறப்புரையாற்ற இருக்கும் மாபெரும் பொதுக் கூட்டத்தில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கிளை கழக செயலாளர்கள், கழகத் தோழர்கள் பெரும் அளவில் பங்கேற்று சிறப்பிப்பது என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப் படுகிறது.

வருகிற 19.4.2024 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் 'இந்தியா' கூட்டணி கட்சியின் சார்பில் மயிலாடுதுறை தொகுதியில் போட்டியிடும் இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளரையும் மற்றும் தஞ்சை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் ச.முரசொலி அவர்களையும் வெற்றி பெற செய்ய நாற்பதும் நமதே நாடும் நமதே ஒன்றுபட்டு நிற்போம். வென்று காட்டியே தீருவோம் என்ற முத்தான முழக்கங்களை கழகத்தின் அனைவரின் மனதில் முன்னிறுத்தி தேர்தலில் ஒற்றுமையாக ஒன்றிய, மாநகர, பகுதி, பேரூர் வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் கழக அணியின் நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் உள்ளிட்ட கழக ஒட்டு மொத்த கழகத்தினரும் ஒன்றிணைந்து தேனிக் களைபோல சுறுசுறுப்பாக தேர்தல் பணியாற்றி பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து 2 வெற்றிக்கனியையும் நம்முடைய நெஞ்சம் நிறைந்த தலைவர் தளபதி அவர்களின் கரங்களில் ஒப்படைத்து சிறப்பிப்போம் என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்தின் மூன்று ஆண்டுகால சாதனைகளான நான் முதல்வன் திட்டம், காலை உணவு திட்டம் மற்றும் எண்ணற்ற திட்டங்களை திராவிட மாடல் எல்லோருக்கும் எல்லாம் தமிழக முதல்வரின் செயல்பாட்டினை இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் என்கின்ற துண்டுப் பிரசுரங்கள் மூலம் இல்லங்கள் தோறும் சென்று திண்ணை பிரச்சாரங்கள் மூலம் மக்களை நேரடியாக சந்தித்து ஒவ்வொரு திட்டங்களையம் எடுத்துக் கூறி 'இந்தியா' கூட்டணிக்கு வாக்குகளை சேகரிக்க வேண்டுமாய் ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்களை இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் மூத்த குடிமக்களுக்கு 85 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு தபால் வாக்குகள் வழங்குகிற பணி தற்சமயம் துவங்கி இருப்பதால், தபால் வாக்கு செலுத்துபவர்களின் பட்டியலை பெற்று அவர்களிடத்தில் வாக்குகளை சேகரித்து தபால் வாக்குகளை முழுமையாகப் பெற ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் முயற்சி செய்து நமது இந்தியா கூட்டணிக்கு வாக்குகளை பெற்றுத்தந்திட வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பா.ஜ.க.விலிருந்து கூட்டணி கட்சிகளும் வேட்பாளர்களும் விலகும் அவலம்!

## பூண்டி கே.கலைவாணன் பங்கேற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் நிர்வாகிகள் பேச்சு!

*திருவாரூர், மார்ச் 27 -* திருவாரூர் மாவட்டத்தை உள்ளடக்கிய நாகை நாடாளுமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் திருவாரூர் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

நாகை நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணியில் சி.பி.ஐ. கட்சியைச் சார்ந்த வை.செல்வராஜ் போட்டியிடுகிறார். அவரை வெற்றி பெற செய்ய முதல்வர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்ட நிலையில், மாவட்டச் செயலாளர்கள் பூண்டி கே.கலைவாணன், என்.கவுதமன் ஆகியோரின் முன்னிலையில் வை.செல்வராஜ் வேட்பு மனுத் தாக்கலும், நாகை தொகுதி செயல்வீரர்கள் கூட்டமும் நடைபெற்றது.

கூட்டத்தில் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பரப்புரையாற்றினர்.

அப்போது பேசிய சட்டமன்ற உறுப்பினர் ஆளூர் ஷா நவாஸ், பா.ஜ.க. தலைமையிலான கூட்டணியில் இணைந்திருந்த கட்சிகள், நாடு முழுவதும் மக்கள் மத்தியில் ஒன்றிய பா.ஜ.க. அரசின்மீது உள்ள கோபத்தினை கண்டு, ஒவ்வொன்றாக பிரிந்தும், போட்டியிட விருப்பம் தெரிவித்து அறிவிக்கப்பட்ட பா.ஜ.க. வேட்பாளர்கள் கூட தங்களின் தோல்வியை ஒப்புக் கொண்டு விலகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

மேலும் சீட் வேண்டாம் என்று சொல்லும் தங்கள் கூட்டணிக்கு சீட் கொடுப்பதுடன், ஒரு சீட் கேட்டவர்களுக்கு நான்கு சீட்டும் கொடுப்பது பா.ஜ.க. கூட்டணியில் போட்டியிட ஆட்கள் இல்லை என்பதை வெட்ட வெளிச்சம் ஆகியுள்ளது. ஆனால் இந்திய கூட்டணியில் ஆம் ஆத்மி, மூவேந்தர் புலிப்படை, மக்கள் நீதி மையம் என பல புதிய கட்சிகள் இணைந்தும், தங்களுக்கு இன்னும் சில தொகுதிகள் கேட்டும் அவர்களுக்கு கொடுக்க முடியாத சூழலும் ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் பா.ஜ.க. கூட்டணியின் தோல்வி பயம் தெளிவாகியிருக்கிறது.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய திட்டங்கள் அனைத்து மக்களுக்கும் சென்று சேர்ந்து இந்தியா கூட்டணியின் வெற்றியை உறுதியாக்கியிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ. மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, நாகை.மாலி, மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்திபாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலரசன், ஆர். எஸ்.பாண்டியன், கோ.செல்வம், ஒன்றியச் செயலாளர்கள் வீ.அன்பரசன், இரா.பாலச்சந்திரன், சேகர் என்கிற கலியபெருமாள், கோ.தட்சிணாமூர்த்தி, எஸ்.ஜோதிராமன், பிரபாகரன், புலிவலம் ஏ.தேவா, கேப்டன். செல்வராஜ், ப.பிரகாஷ், இரா. மனோகரன், பால.ஞானவேல், வி.எஸ்.ஆர். தேவதாஸ், வே.மனோகரன், ஐ.வி.குமரேசன், நகர செயலாளர்கள் வாரை. எஸ். பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பா.சிவனேசன், நன்னிலம் பக்கிரிசாமி, ஏ.கே.டி.சேரன், பேரளம் தியாகு, பூண்டி கே.கலைவேந்தன், பொதுக் குழு உறுப்பினர் டி.செந்தில், செல்வா ஜெயதேவன் மற்றும் பனங்குடி ஏ. எஸ். குமார், குன்னலூர் அன்பழகன், எம்.என்.ராஜா, பா. அரவிந்த் உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்களும் பங்கேற்றனர்.

## தி.மு.க. தலைமையிலான 'இந்தியா' கூட்டணி

# கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி சங்கராபுரத்தில் தேர்தல் அலுவலகம்!

## உதயசூரியன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

*சங்கராபுரம், மார்ச் 27-* தி.மு.க. தலைமையிலான 'இந்தியா' கூட்டணி கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி சங்கராபுரத்தில் தி.மு.க. தேர்தல் அலுவலகம் திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் உதயசூரியன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு தேர்தல் அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதியின் கழக வேட்பாளர் தே.மலையரசன் அனைவரிடத்திலும் வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டு வாக்குகள் சேகரித்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்வில் சங்கராபுரம் பேரூர்ச் செயலாளர் துரை.தாகப்பிள்ளை அனைவரையும் வரவேற்றார். தி.மு.க. மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி, ஒன்றியச் செயலாளர் ந.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் ஒன்றியக் குழுத் தலைவர் திலகவதி நாகராஜன், பாப்பாத்தி, எம்.எஸ்.குமார், வழக்கறிஞர்கள் பரமகுரு, ஜனார்த்தனன், பால அண்ணாமலை, ரமேஷ் குமார், பிரபாகரன், தொழிலதிபர் ஆறு.கதிரவன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் வேல்.பழனியம்மாள், காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர் ஜெய்கணேஷ், தி.மு.க. மற்றும் இந்திய கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளராகப் போட்டியிடும் சி.என்.அண்ணாதுரை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவைச் சந்தித்து வாழ்த்து பெற்று, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கூட்டணி இயக்கத்தைச் சார்ந்த செங்கம் குமார், எம்.சிவக்குமார், சி.நியூடன், இரா.ஸ்ரீதரன், பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ எஸ்.பன்னீர்செல்வம், பிரியாவிஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.